## டிசம்பர் – 03 – திருவருகைக்கால 01ம் ஞாயிறு

### கடவுளே! எங்களை முன்னைய நன்னிலைக்குக் கொணர்ந்தருளும்! திபா. 80:3

### முதல் வாசகம் : ஏசாயா 63 : 16 – 17, 19,64:2 – 7

ஆண்டவரே நீரே எங்கள் தந்தை. ஆபிரகாம் எங்களை அறியார் இஸ்ரயேல் எங்களை ஏற்றுக்கொள்ளார் ஆண்டவரே, நீர்தான் எங்கள் தந்தை் பண்டை நாளிலிருந்து "எம் மீட்பர்" என்பதே உம் பெயராம். ஆண்டவரே, உம் வழிகளிலிருந்து எங்களைப் பிறழச் செய்வதேன்? உமக்கு அஞ்சி நடவாதவாறு எம் நெஞ்சங்களைக் கடினப்படுத்தியதேன்? உம் ஊழியர்களை முன்னிட்டும், உம் உரிமைச் சொத்தாகிய, குலங்களை முன்னிட்டும் திரும்பி வாரும்.விறகின்மேல் தீ கொழுந்துவிட்டு எரிவது போலும், தண்ணீரை நெருப்பு கொதிக்கச் செய்வது போலும், அவற்றின் நிலைமை இருக்கும். இவற்றால் உம் பெயர் உம் பகைவருக்குத் தெரியவரும் வேற்றினத்தார் உம் திருமுன் நடுங்குவர். நாங்கள் எதிர்பாராத அச்சம் தரும் செயல்களை நீர் செய்தபோது நீர் இறங்கி வந்தீர் மலைகள் உம் முன்னே உருகி ஓடின! தம்மை நம்பியிருப்போருக்காகச் செயலாற்றும் கடவுள் உம்மையன்றி வேறு யார்? முற்காலம் முதல் இதுபற்றி எவரும் கேள்வியுற்ற தில்லை. செவியுற்றதுமில்லை, கண்ணால் பார்த்ததுமில்லை. மகிழ்ச்சியுடன் நேர்மையைக் கடைப்பிடிப் போர்க்கும் உம்மையும் உம் வழிகளையும் நினைவில் கொள்வோர்க்கும் நீர் துணை செய்ய விரைகிறீர் இதோ, நீர் சினமடைந்தீர் நாங்கள் பாவம் செய்தோம் நெடுங்காலமாய்ப் பாவம் செய்திருக்க, நாங்கள் மீட்கப்படுவது எங்ஙனம்? நாங்கள் அனைவரும் தீட்டுப்பட்ட வரைப்போல் உள்ளோம் எங்கள் நேரிய செயல்கள் எல்லாம் அழுக்கடைந்த ஆடைபோல் ஆயின் நாங்கள் யாவரும் இலைபோல் கருகிப் போகின்றோம் எங்கள் தீச்செயல்கள் காற்றைப் போல் எங்களை அடித்துச் சென்றன. உம் பெயரைப் போற்றுவார் எவரும் இல்லை உம்மைப் பற்றிக்கொள்ள முயல்பவர் எவரும் இல்லை நீர் உம் முகத்தை எங்களுக்கு மறைத்துள்ளீர் எங்கள் தீச்செயல்களின் பிடியில் எங்களை அழியவிட்டீர்.

**பதில்பாடல் :** கடவுளே எம்மை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும்.

### இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1 : 3 - 9

சகோதர சகோதரிகளே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக! இயேசு கிறிஸ்து நமக்கு மட்டும் அல்ல, அனைவருக்கும் ஆண்டவர். கிறிஸ்து இயேசுவின் வழியாக நீங்கள் பெற்றுக்கொண்ட இறையருளை முன்னிட்டு உங்களை நினைத்து என் கடவுளுக்கு என்றும் நன்றி செலுத்துகிறேன். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பெற்றுச் சொல்வன்மையும் நிறையறிவும் பெற்று, எல்லா வகையிலும் செல்வர்களானீர்கள். மேலும் கிறிஸ்துவைப்பற்றிய சான்று உங்களால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படு வதற்காகக் காத்திருக்கும் உங்களுக்கு அருள்கொடை எதிலும் குறையே இல்லை. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் நீங்கள் குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருக்க அவர் உங்களை இறுதிவரை உறுதிப்படுத்துவார். கடவுள் நம்பிக்கைக்கு உரியவர் தம் மகனும் நம் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நட்புறவில் பங்குபெற உங்களை அவர் அழைத்து உள்ளார்.

### நற்செய்தி : மாற்கு 13 : 33 - 37

அக்காலத்தில் மானிட மகனின் வருகையைக் குறித்து இயேசு தமது சீடர்களுக்குக் கூறியதாவது: எனது பெயரின் பொருட்டு எல்லாரும் உங்களை வெறுப்பர். ஆனால் இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர். "நடுங்க வைக்கும் தீட்டு" நிற்கக்கூடாத இடத்தில் நிற்பதை நீங்கள் காண்பீர்கள். படிப்பவர் இதைப் புரிந்து கொள்ளட்டும். அப்போது யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்குத் தப்பி ஓடட்டும். வீட்டின் மேல் தளத்தில் இருப்பவர் கீழே இறங்க வேண்டாம் தம் வீட்டினின்று எதையும் எடுக்க அதில் நுழையவும் வேண்டாம். வயலில் இருப்பவர் தம் மேலுடையை எடுக்கத் திரும்பி வரவேண்டாம். அந்நாள்களில் கருவுற்றிருப்போர், பாலூட்டுவோர் ஆகியோர் நிலைமை அந்தோ பரிதாபம்! இவை குளிர்காலத்தில் நிகழாதபடி இறைவனிடம் வேண்டுங்கள். ஏனெனில் இவை துன்பம்தரும் நாள்களாய் இருக்கும். கடவுள் படைக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து இந்நாள்வரை இத்தகைய வேதனை உண்டானதில்லை. இனிமேலும் உண்டாகப் போவதில்லை. ஆண்டவர் அந்நாள்களைக் குறைக்காவிடில் எவரும் தப்பிப் பிழைக்க முடியாது. ஆனால் தாம் தேர்ந்து கொண்டவர்களின் பொருட்டு அவர் அந்நாள்களைக் குறைத்திருக்கிறார். "அப்பொழுது யாராவது உங்களிடம், "இதோ, மெசியா இங்கே இருக்கிறார் அதோ, அங்கே இருக்கிறார்" எனச் சொன்னால் நீங்கள் நம்பவேண்டாம். ஏனெனில் போலி மெசியாக்களும், போலி இறைவாக்கினர்களும் தோன்றி, முடியு மானால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களையே நெறிதவறச் செய்ய அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் செய்துகாட்டுவர். நீங்களோ கவனமாயிருங்கள். அனைத்தையும் முன்னதாகவே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். "அந்நாள்களில் அவ்வேதனை களுக்குப் பிறகு கதிரவன் இருண்டுவிடும் நிலா ஒளிகொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழுந்த வண்ணமிருக்கும் வான்வெளிக் கோள்கள் அதிரும். அப்போது மிகுந்த வல்லமை யோடும், மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதைக் காண்பார்கள். பின்பு அவர் வானதூதரை அனுப்பி, அவர்கள் மண்ணுலகில் ஒரு கோடியிலிருந்து விண்ணுலகில் மறுகோடிவரை நான்கு திசைகளிலிருந்தும் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார். "அத்தி மரத்திலிருந்து ஓர் உண்மையைக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன்றும்போது கோடைக்காலம் நெருங்கி வந்துவிட்டது என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அவ்வாறே இவை நிகழ்வதைக் காணும்போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். இவையனைத்தும் நிகழும்வரை இத்தலைமுறை ஒழிந்து போகாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும் ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா. "ஆனால் அந்த நாளையும் வேளையையும் பற்றித் தந்தைக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது விண்ணகத்திலுள்ள தூதருக்கோ மகனுக்கோ கூடத் தெரியாது. கவனமாயிருங்கள், விழிப்பா யிருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வரும் என உங்களுக்குத் தெரியாது. நெடும்பயணம் செல்லவிருக்கும் ஒருவர் தம் வீட்டைவிட்டு வெளியேறும்போது தம் பணியாளர் ஒவ்வொருவரையும் அவரவர் பணிக்குப் பொறுப்பாளராக்கி, விழிப்பாயிருக்கும்படி வாயில் காவலருக்குக் கட்டளையிடுவார். அதுபோலவே நீங்களும் விழிப்பாயிருங்கள். ஏனெனில் வீட்டுத் தலைவர் மாலையிலோ, நள்ளிரவிலோ, சேவல் கூவும் வேளையிலோ, காலையிலோ எப்போது வருவார் என உங்களுக்குத் தெரியாது. அவர் திடீரென்று வந்து நீங்கள் தூங்குவதைக் காணக்கூடாது. நான் உங்களுக்குச் சொல்லுவதை எல்லாருக்குமே சொல்கிறேன் விழிப்பாயிருங்கள்" என்றார்.

**தியானம்:** வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் "விழிப்புத் தேவை" என்பது மனித வாழ்வின் பொது நியதி எனப்படும். விழிப்பு என்பது வரவிருக்கும் ஆபத்துக்களிலிருந்து தப்பிப்பதற்கு உதவும். வருகின்ற சவால்களைத் துணிச்சலோடு எதிர்கொள்ளும். தடைகளைக் கண்டு தளர்ந்து போகாமல் தாண்டிச் செல்கின்ற வலிமையைத்தரும். திருவழிபாட்டு ஆண்டின் தொடக்கத்தில் நாம் விழிப்பாயிருக்க அழைக்கப்படுகிறோம். "விழிப்பு" என்றால் கண்தூங்காமல் இருப்பது என்பது முதல் பொருள். அதே நேரத்தில் ஒவ்வொருவரும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை ஆற்றுவதில் அக்கறையோடும், அர்ப்பணிப்போடும் ஈடுபட்டிருப்பதும்

“விழிப்பாயிருத்தலோடு“ நெருங்கிப் பிணைந்ததாகும். பயணம் செல்லவிருக்கின்ற வீட்டுத் தலைவர் தம் பணியாளர்களிடம் வீட்டுப் பொறுப்பை ஒப்படைக்கின்றார் (மாற்கு 13:33-37). அவர் எந்த நேரத்திலும் வீடு திரும்பக்கூடும். அவர் வருகின்ற வேளையில் பணியாளர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நன்முறையில் ஆற்றுகின்றனரா எனப்பார்ப்பார். விழிப்பாயிருக்கின்ற பணியாளரே பொறுப்பானவராகவும் செயல்பட்டுத் தம் தலைவரின் விருப்பத்தை நிறைவேற்றுவார். விழித்திருப்போர் பொறுப்பான விதத்தில் செயல்படுகின்ற மனிதராவர் என்பதனை நற்செய்தி தெரிவிக்கின்றது. இயேசு நம்மிடம் எதிர்பார்க்கின்ற “விழிப்பு” எனப்படுவது, அவரிடமிருந்து நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட பொறுப்பை முழுமனதோடு ஏற்று நடைமுறைப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருக்க நமக்கு உந்துதல் தரவேண்டும். விழித்திருப்போர் தம் இதயத்தை ஆண்டவராம் இயேசுவுக்கு எந்தநேரத்திரும் திறந்து வைப்பார்கள். அவர்களது இதயத்தில் இரட்சகர் இயேசு நுழைந்திட யாதொரு தடையும் இருக்காது. எந்த நேரத்தில் இயேசு அவர்களைத் தேடிவந்தாலும் அவர்கள் தங்கள் இதயக் கதவுகளைத் திறந்துவிட முன்வருவார்கள். எனவே, இயேசு நம்மைப் பார்த்து, “நான் உங்களுக்குச் சொல்வதை எல்லாருக்குமே சொல்கிறேன்: விழிப்பாயிருங்கள்“ என அழைப்பு மாத்திரம் விடவில்லை “விழிப்பாயிருங்கள்” என மிகப்பெரியதொரு சவாலையும் எமக்கு விடுக்கின்றார்.